அருப்புக்கோட்டையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் கே.கே.எஸ்.ஆர்.ஆர்.ராமச்சந்திரன் தி.மு.க. வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் அருப்புக்கோட்டை முன்னாள் நகர் மன்ற தலைவர் சிவப்பிரகாசம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் ஆகியோர் உள்ளனர்.

விருதுநகரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளராக களமிறங்கும் விஜய பிரபாகரன் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் தி.மு.க. மாவட்டச் செயலாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தனது வேட்புமனுவை தேர்தல் அலுவலர் சிவபாலனிடம் அளித்தார். உடன் கழக செய்தி தொடர்பு துணை தலைவர் மருது அழகுராஜ், பன்னீர் (காங்கிரஸ்) தனசேகரன் (தே.மு.தி.க.) ஆகியோர் உள்ளனர்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும் சட்டப்பேரவை தலைவருமான மு.அப்பாவு அவர்கள் இராதாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜ செல்வியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், காங்கிரஸ் பிரமுகர் சேம்பர் செல்வராஜ்,தே.மு.தி.க. விஜி செல்வம், வி.சி.க அருள் செல்வன் ஆகியோர் உள்ளனர்.

தி.மு.க.
இளைஞர் அணி

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, முதல்கட்ட பரப்புரையை முடித்துள்ள நிலையில், 2–ஆம் கட்டமாக புதுச்சேரி மாநிலத்தில் அவர் மேற்கொள்ள உள்ள பரப்புரை பயண விவரம் வருமாறு :

7.4.2026 செவ்வாய்க்கிழமை

நேரம்	தொகுதிகள்	இடம்
காலை 10.00 மணி	முதலியார்பேட்டை, உப்பளம், பாகூர்.	மரப்பாலம், முதலியார்பேட்டை.
காலை 10.45 மணி	வில்லியனூர், திருபுவனம், மங்கலம்.	கிழக்கு சந்நிதி வீதி, வில்லியனூர்.
காலை 11.30 மணி	நெல்லித்தோப்பு, உருளையான்பேட்டை, காலாப்பட்டு, கதிர்கிராமம், ராஜ்பவன்.	அண்ணா சிலை எதிரில், அண்ணா சாலை, புதுச்சேரி.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18

கலைஞர் 100 1924 - 2023

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

தலைமைக் கழக அறிவிப்பு!

தேதி	நேரம்	மாவட்டம்	சட்டமன்றத் தொகுதி
7.4.2026	காலை 10.00 மணி	திருவள்ளூர் மேற்கு	திருத்தணி
”	பகல் 12.00 மணி	இராணிப்பேட்டை	சோளிங்கர்
”	மாலை 4.00 மணி	திருவண்ணாமலை வடக்கு	ஆரணி
”	மாலை 6.00 மணி	திருவண்ணாமலை தெற்கு	போளூர்
”	இரவு 8.00 மணி	”	கலசப்பாக்கம்
8.4.2026	காலை 10.00 மணி	கள்ளக்குறிச்சி தெற்கு	ரிஷிவந்தியம்
”	பகல் 12.00 மணி	கள்ளக்குறிச்சி வடக்கு	சங்கராபுரம்
”	மாலை 4.00 மணி	சேலம் கிழக்கு	ஆத்தூர்
”	மாலை 6.00 மணி	சேலம் மத்திய	சேலம் தெற்கு
”	இரவு 8.00 மணி	”	சேலம் மேற்கு
9.4.2026	காலை 10.00 மணி	நாமக்கல் கிழக்கு	நாமக்கல்
”	பகல் 12.00 மணி	நாமக்கல் மேற்கு	குமாரபாளையம்
”	மாலை 4.00 மணி	ஈரோடு மத்திய	பவானி
”	மாலை 6.00 மணி	ஈரோடு தெற்கு	ஈரோடு கிழக்கு
”	மாலை 7.00 மணி	ஈரோடு தெற்கு	மொடக்குறிச்சி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018

தலைமைக் கழகம்
தி.மு.க.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட கா.கருணாநிதி கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அருகில் ஒன்றிய செயலாளர் பிக்கிலிபட்டி முருகேசன் ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், அய்யாதுரை, பொதுக்குழு உறுப்பினர் இரா. ரமேஷ் உள்ளார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர் பி.எச்.பி.மனோஜ் பாண்டியன் ஆலங்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அலுவலர் ராமச்சந்திரனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன், முன்னாள் எம்.பி. ராமசுப்பு,கௌரவ செயலாளர் முஸ்லிம் பெண்கள் உதவும் சங்கம் எம்.முகம்மது ஸலீம் ஆகியோர் உள்ளனர்.